(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 14.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2019 சனவரி 08 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 5 ஆம் இலக்கம் வரையிலான விடயங்கள் மீதான நடவடிக்கைகள் இன்றைய தின அமர்வில் 27 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— தெரிவுக் குழு (இல.1),— 114 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் தெரிவுக் குழுவானது நடப்பு அமர்வின் போது சேவையாற்றுவதற்காக சபாநாயகரைத் தவிசாளராகவும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அல்லது அவர்களின் நியமத்தர்களையோ உள்ளடக்கிய வகையில் பாராளுமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்படும் பதினேழு (17) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

3.

பாராளுமன்ற சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல.2),— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் மற்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்துவ உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பின்வரும் ஐந்து (05) உறுப்பினர்களும் தற்போதைய கூட்டத்தொடரின் சேவைக்காக தெரிவுக்குழுவில் சேவையாற்றுவார்களாக:-

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ சஜித் பிரேமதாஸ

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

4.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— பாராளுமன்றத்தின் 115 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் மேலும் பதின்மூன்று (13) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

5.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அரசாங்க நிதி பற்றிய குழு,— 121 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் அரசாங்க நிதி பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் பதின்மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 05 ஆம் திகதிய 2074/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

இரசாயன ஆயுதங்கள் சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 11 ஆம் திகதிய 2088/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் துருக்கிக் குடியரசிற்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 13 ஆம் திகதிய 2079/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.